

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நேற்று முன்தினம் (02.02.2026) நடைபெற்ற விழா நிகழ்வில நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் .கே. என்.நேரு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றி, பள்ளிக்கு நிலம் வழங்கிய குடும்பம், புரவலர்கள் மற்றும் 10ம் வகுப்பு,12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை பாராட்டி நினைவு பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் .ஆர். பாலாஜி, முசிறி சார் ஆட்சியர் செல்வி சுஷ்ரி சுவாங்கி குந்தியா, முதன்மை கல்வி அலுவலர் கோ,கிருஷ்ண பிரியா, மாவட்ட கல்வி அலுவலர் முருகேசன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன், முசிறி நகர் மன்ற தலைவர் கலைச்செல்வி சிவக்குமார், பள்ளியின் தலைமை ஆசிரியர் பல்த்தாசர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் தலைவர் நல்லாட்சி நாயகர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலத் திட்டங்களால் ஈர்க்கப்பட்டு திருமயம் சட்டமன்ற தொகுதியில் திருமயம் பகுதியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் அண்ணாமலை ரகுபதி, திருமயம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆறு சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் திருமயம் சந்தை பேட்டடையைச் சேர்ந்த அப்துல் ஹஃபார் கான் ஏற்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். மேலும் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் திருமயம் தொகுதியில் உதயசூரியன் மலர்ந்திட தொடர்ந்து பாடுபடுவோம் என தெரிவித்தனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம்,மல்லுப்பட்டியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 ஆவது நினைவு நாளையொட்டி தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் அவைத்தலைவர் கே.மனோகரன், ஒன்றிய செயலாளர்கள் எம்வீடி.கோபால், பி.கே.அன்பழகன், முனியப்பன், மாநில நிர்வாகி சூடப்பட்டி. சுப்பிரமணி, மாவட்ட நிர்வாகி முருகன், மூத்த வழக்கறிஞர் டி.சந்திரசேகர், பி.சி.ஆர்.மனோகரன், சந்தர், பி.என்.சி.மகேஷ், குட்டி.மோகன், ஏ.வி.குமார், முன்னாள் ஒன்றிய செயலாளர் இல.கிருஷ்ணன், மூத்த முன்னோடி ஜி.எல்.வெங்கடாசலம், கவுன்சிலர் கார்த்தி மற்றும் ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

### விமானப் பயணிகளின் பாதுகாப்பு குறித்து

# ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?

## மக்களவையில்– டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி,பிப். 4 -*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 29 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், விமானப் பயணிகளின் பாதுகாப்பு குறித்து ஒன்றிய அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும், ஏர் மார்ஷல் ஏ. கே. சேத் குழுவின் பாதுகாப்பு பரிந்துரைகள் ஏன் அமலாக்கப்படவில்லை? என்றும் கண்காணிப்பு ஆணையத்தின் அறிக்கைகள் ஏன் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுவது இல்லை? என்றும், எல்லா அறிக்கைகளுமே விமான ஓட்டிகளை குறை சொல்வது ஏன்? என்றும் கடந்த இருபது ஆண்டுகளின், விமான



விபத்துகளிலிருந்து ஒன்றிய அரசு பாடம் கற்றுக் கொள்ளாதது ஏன்? என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத்துறை இணையமைச்சர் முரளிதர் மகோல் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு :

ஒன்றிய அரசின் விமான விபத்துகள் கண்காணிப்பு ஆணையம் கடந்த 2012ஆம் ஆண்டில், முழு அதிகாரம் பெற்ற அமைப்பாக விமானப் போக்குவரத்து அமைச்சகத்தால் அமைக்கப்பட்டது என்றும், ஏர் மார்ஷல் ஏ.கே.சேத் குழுவின் பரிந்துரைப்படியே இந்த ஆணையம் முழு அதிகாரம் கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்டது என்றும், விமான விபத்துக்கள் கண்காணிப்பு விதிகளின்படியே, நியாயமாகவும், நேர்மையாகவும், முறையான கண்காணிப்புகளை இந்த ஆணையம் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும்,

இந்த ஆணையத்தின் அறிக்கைகள் அனைத்தும் ஆணையத்தின் இணையத் தளத்தில் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும், விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகத்தின் இணைய தளத்தில் கடந்த 2006 ஆண்டு முதலாக தற்போது வரை உள்ள அறிக்கைகள் அனைத்தும் பொதுமக்களுக்கு முறையாக தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு விமானப் போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மகோல் அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.


